தமிழ்ச்சோலை - பிரான்சு
Tamoulcholai-France

# திருக்குறள் திறன் போட்டி 2026

## வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

# தமிழ்ச்சோலை மட்டப் போட்டி நெறிமுறைகள்

தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளின் போட்டியாளர்களும், தமது பிரிவுக்குரிய அனைத்துக் குறள்களையும் மனனஞ்செய்து, ஒப்புவித்தல் வேண்டும்.

போட்டியாளர்கள் குறளின் பொருளறிந்து மனனம் செய்வது போட்டிக்கான திறனை மேம்படுத்தும்.

## போட்டிக்கான புள்ளிகள்

1. மனனம்
2. ஒலிப்பு
3. பலுக்கல்
4. உணர்வு
5. நிலை

என்பனவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

**எல்லாப்பிரிவுகளிலும் அதிகாரம் கூறப்பட வேண்டும்.**

பள்ளியின் அனைத்து மாணவர்களும் திருக்குறள் திறன் போட்டியில் பங்கு கொள்வது அவர்களின் தமிழ் மொழித் திறனை மேம்படுத்தும். பள்ளி மட்டத்தில் பங்கு கொள்ளும் மாணவர்களை ஊக்குவிப்பது அந்தந்த பள்ளியின் கடமையாகும்.



# திணைக்கள மட்டப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

முதற்சொல் எழுதப்பட்டிருக்கும் திருவுளச்சீட்டின் மூலம் இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும்.

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவுகள் – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொற்களைக் கொண்டு** குறள்கள் கேட்கப்படும்.
- எல்லாப் பிரிவிலும் அதிகாரம் கூறப்படல் வேண்டும்.

### குறள் ஒப்புவிப்பின்போது

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

திணைக்களமட்டப் போட்டியின்போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.



# இறுதிப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களைக்** கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும்** கூறவேண்டும். (திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவு – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.
- **மேற்பிரிவிலிருந்து** ...

1. அதிகாரத்தைக் குறிப்பிட்டு **அதிகார எண்** கேட்கப்படும்.
2. குறிப்பிட்ட குறளுக்குரிய **அதிகாரத்தைக் கூறுமாறு** கேட்கப்படும்.
3. குறள்களின் **பொருள்களுக்குரிய** விளக்கம் தொடர்பான **வினாக்கள்** வினவப்படும்.

---

**அனைத்துப் பிரிவுகளிலும்**

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

**என்பன கவனிக்கப்படும்.**



# திருக்குறள் திறன் போட்டி – 2026

Tamoulcholai-France

## மேற்பிரிவு

**அகவை எல்லை 01.09.2010 – 31.08.2012**

### 1. அதிகாரம் 46 : சிற்றினஞ் சேராமை

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்

பொருள் : நல்ல மனம் மாந்தர்க்கு செல்வம் தரும். இனநன்மையே எல்லாப் புகழையும் தரும்.

### 2. அதிகாரம் 95 : மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

பொருள் : பொருள் : உண்ட உணவு செரித்த பின்பு தேவையான அளவை அறிந்து உண்டால், உடம்பிற்கு மருந்து என்றும் வேண்டியதில்லை.

### 3. அதிகாரம் 14 : ஒழுக்கமுடைமை

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

பொருள்: உலகத்தவரோடு ஒட்டி வாழும் தன்மை அற்றவர் பல நூல்களைக் கற்றவராயினும் அறிவில்லாதவரே.

### 4. அதிகாரம் 84 : பேதைமை

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்

பொருள்: அறியாமை எல்லாவற்றிலும் பெரிய அறியாமை , ஒருவன் தனக்குத் தகாத ஒழுக்கத்தில் பெருவிருப்பம் கொள்ளுதல் ஆகும்.

### 5. அதிகாரம் 30 : வாய்மை

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

பொருள்: புறவிருளைப் போக்கும் எல்லா விளக்கும் சிறந்த விளக்கு ஆகாது. சான்றோர்க்குப் அக இருள் போக்கும் பொய்யாமையாகிய விளக்கே அவற்றில் சிறந்த விளக்காகத் தோன்றும்.

### 6. அதிகாரம் 99 : சான்றாண்மை

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

பொருள் : ஆற்றலுடையவரின் திறமை பணிவுடன் நடத்தலாகும். அதுவே சான்றோர்க்கு, தம் பகைவரையும் நண்பராக மாற்றும் ஆயுதமாக இருக்கிறது.

### 7. அதிகாரம் 17 அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு

பொருள்: ஒருவன் தன் மனத்தில் பொறாமை இல்லாத தன்மையைத் தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும்.

திருக்குறள் திறன் போட்டி 2026

வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்